## 16.
## மாடு/குதிரை இழுக்கும் வாகன காப்பீடு

**1. காப்புறுதியின் வீச்செல்லை**

A. விலங்குகளால் இழுக்கப்படும் வாகனத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

i) தீ விபத்து காரணமாக முழு இழப்பு ஏற்படும் நிகழ்வைத் தவிர்த்து, வேறு எந்த விபத்தின் காரணமாக ஏற்படும் இழப்பு அல்லது சேதமானது, ஒவ்வொரு உரிமக்கோரிக்கைக்கும் ரூ.50/- க்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

ii) வாகனத்தில் காற்றடைத்த அல்லது கடின ரப்பர் டயர்கள் பொருத்தப்பட்டிருப்பின், டயரின் மதிப்பில் 50% மட்டுமே இழப்பீடாக வழங்கப்படும்.

iii) கலவரம் அல்லது வேலை நிறுத்தம் போன்றவைகளினால் ஏற்படும் இழப்பு அல்லது பாதிப்பு

**B. விலங்கு இறந்து போதல் அல்லது நிரந்தர திறனிழப்பு**

காப்பீட்டின் கீழ் விலங்குகளும் காப்புறுதி பெற்றிருக்கும் பட்சத்தில், காப்பீடு பெற்ற வாகனத்திற்கு விபத்து ஏற்படும் வேளையில் மற்றும் அதன் காரணமாக, வாகனத்தை இழுக்கும் விலங்குகள் இறந்து போதல் அல்லது நிரந்தரமாக திறனிழத்தல்.

**C. மூன்றாம் நபர்கள் & பயணிகளுக்கான பொறுப்புகள்**

i) உயிரிழப்பு அல்லது உயிரிழப்பை விளைவிக்காத காயம் மற்றும் மூன்றாம் நபரின் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தக்கூடிய விபத்தின் காரணமாக எழுகின்ற பொறுப்பில் ஏதேனும் ஒரு விபத்திற்கு ரூ.10,000/- வரையிலும் மற்றும் ஒரு வருடத்தில் ஏற்படும் அனைத்து விபத்துகளுக்கும் ரூ.25,000/- வரையிலும் இழப்பீடு பொறுப்பு இருக்கும். பயணிகளின் உயிரிழப்பு அல்லது தனிப்பட்ட காயங்களுக்கான பொறுப்பும் இந்த வரையறைக்குள்ளேயே அடங்கும்.

ii) வாகனம் சுமை ஏற்றப்படும்போது அல்லது இறக்கப்படும்போதோ கூட இப்பொறுப்பு காப்புறுதியளிக்கும். கொண்டு செல்லும் சரக்குகளுக்கான சேதத்திற்கு இது காப்புறுதி வழங்காது.

iii) வாகனத்தை தனிநபர் மற்றும் தொழில் ரீதியிலான நோக்கம் மற்றும் வாடகை அல்லது பரிசுக்காக என பயன்பாடுகளில் இப்பாலிசி எந்தவொரு வேறுபாடுகளையும் செய்யாது.

**D. வாகனத்தை ஓட்டும் நபருக்கான தனிநபர் விபத்து காப்புறுதி**

வாகனத்தின் மீதான விபத்தை தொடர்ந்து வாகனத்தின் ஓட்டுனர் உயிரிழந்தால் மற்றும் / அல்லது இரண்டு கால்களையும் இழந்தால் அல்லது இரண்டு கைகள் இழப்பு அல்லது இரண்டு கண்களிலும் பார்வை இழத்தல் மற்றும் / அல்லது ஒரு காலை முழுவதுமாக இழத்தல் மற்றும் / அல்லது ஒரு கை மற்றும் ஒரு கண் பார்வை இழப்பு ஏற்படும் பட்சத்தில் இழப்பீட்டுத் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும்.

E. அருகிலுள்ள பழுது நீக்குபவரிடம் வாகனத்தை கொண்டு செல்லும் வகையில் இழுத்துச்செல்லல் கட்டணமாக ரூ.50/- வழங்கப்படும்.

**2. பிரீமியம் கட்டணங்கள்**

விலங்கு மற்றும் வண்டி ஆகியவைகளின் ஒட்டுமொத்த சந்தை மதிப்பில் 1.40 சதவிகிதம் ப்ரீமியம் கட்டணமாக வசூலிக்கப்படும். சந்தை மதிப்பைக் கணக்கிடும்போது, வாகனம் பயன்பாட்டிலுள்ள ஆண்டுகள் எண்ணிக்கையின் அடிப்படையில், நியாயமான தேய்மான தொகை கருத்தில் கொள்ளப்படும். நோய்களுக்கான காப்பீடு தேவைப்படின், கால்நடை காப்பீடுச் சந்தை ஒப்பந்தத்தின்படி, விலங்கிற்கேற்றவாறு அந்த பிரிமியத்தொகை இதனோடு சேர்க்கப்படும்.

**நீண்ட கால தள்ளுபடி**

| | |
|---|---|
| 3 ஆண்டுகளுக்கு | 15% |
| 5 ஆண்டுகளுக்கு | 25% |

குழு தள்ளுபடி

| **எண்ணிக்கைகள்** | **தள்ளுபடி** |
|---|---|
| 500 முதல் 1000 வரை | 5% |
| 1001 முதல் 2500 வரை | 10% |
| 2501 முதல் 5000 மற்றும் அதற்கு மேல் | 15% |

**3. பாலிசி**

வழக்கமான இதர (Miscellaneous) விபத்து பாலிசி தொகுப்புடன் "விலங்குகளால் இழுக்கப்படும் வாகனம்" உட்பிரிவு இணைக்கப்பட வேண்டும் மற்றும் பாலிசி அட்டவணை படிவத்தில் வண்டி குறித்த தகவல் இடம்பெற வேண்டும்.

**4. உரிமக் கோரிக்கைகள் தீர்வு**

நியாயமான காலத்திற்குள் அருகிலுள்ள நிறுவன அலுவலகத்தில் விபத்து குறித்த விபரங்களை பதிவு செய்ய மோட்டார் உரிமக் கோரிக்கைப் படிவத்தைப் பயன்படுத்தலாம். திருட்டு அல்லது மூன்றாம் நபர் காயங்கள் அல்லது சொத்துக்கு சேதங்கள் போன்ற நேர்வுகளில், அருகிலுள்ள காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும். உரிமக்கோரிக்கை படிவத்தின் அடிப்படையில் எங்கள் ஆட்டோமொபைல் பொறியியலாளர் அல்லது நிறுவனத்தின் பொறுப்பாளர்களில் யாரேனும் ஒருவர் வண்டியை சோதனை செய்வார். இந்த அலுவலர், பழுதுகள் மற்றும் மாற்றவேண்டிய பாகங்களுக்கான மதிப்பீட்டை சரிபார்க்க வேண்டும்.

**5. ஆவணங்கள்**

a) முன்மொழிவு படிவம் (அச்சிடப்பட்டது)
b) வழக்கமான இதர பாலிசி தொகுப்புடன் (அச்சிடப்பட்டது) ஏடிசி (ADC) உட்பிரிவு இணைக்கப்பட வேண்டும்.
c) உரிமக்கோரிக்கை படிவம்